## பத்திரிக்கை செய்தி

## வழக்கை சாதகமாக முடித்து வைப்பதற்காக லஞ்சம் கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் கைது

இடையன்காட்டுவலசு, ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த புகார்தாரரின் உடன் பிறந்த தங்கை கணவர் குடும்பத்திற்கும், தங்கை கணவரின் சித்தப்பா குடும்பத்திற்கும் இடையே பூர்வீக வீட்டு நிலம் சம்பந்தமாக இருவீட்டாருக்கும் பிரச்சனை இருந்து வந்துள்ளது. தற்பொழுது தங்கை கணவரின் சித்தப்பா மகன்கள் பூர்வீக இடத்தில் வீடு கட்டி வருகிறார்கள். இந்நிலையில் கடந்த 06.09.2022-ஆம் தேதி இரவு 07.30 மணி சுமாருக்கு இரு குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட தகராரில் புகார்தாரரின் தங்கையின் கணவர் அவரது அம்மா அகியோரை தங்கை கணவரின் சித்தப்பா மகன்கள், அவரது மனைவி மற்றும் அவர்களது அம்மா ஆகியோர் ஒன்று சேர்ந்து அடித்துள்ளனர். அவர்கள் நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அங்கு சிகிச்சையில் இருந்தபோது பரமத்தி காவல் நிலையத்தில் இருந்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்கள் வந்து எனது தங்கை கணவர் அவர்களிடம் வாக்குமூலம் பெற்றுச்சென்று மனு ரசீது பதிவு செய்துள்ளார். இவர்கள் போலிசில் கேஸ் கொடுத்தது தெரிந்து தங்கை கணவரின் சித்தப்பா மகன் குடும்பத்தாரும் புகார்தாரரின் தங்கை, அவரது கணவர் மற்றும் மாமியார் ஆகியோர் சேர்ந்து அவர்கள் குடும்பத்தார் நான்கு பேரையும் அடித்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளனர். தனது தங்கையின் கணவர் நுரையீரல் நோய் உள்ளவர், எனது தங்கைக்கும் முடக்குவாத நோய் உள்ளது. அவரது மாமியார் குச்சி ஊன்றிதான் நடந்து செல்வார். இரண்டு புகார்களையும் பதிவு செய்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்கள் விசாரணை செய்துள்ளார். புகார்களின் மேல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் அப்படியே முடித்துக்கொள்ள வேண்டுமானால் காவல் நிலையம் வந்து தன்னை கவனிக்க வேண்டும் என்று கூறி வநதுள்ளார். என்ன செய்வது என்று தெரியாமல் புகார்தாரரின் தங்கை குடும்பத்தார் காவல் நிலையம் செல்லவில்லை. பின்னர் SSI அசோக்குமார் தொடர்ந்து புகார்தாரரின் தங்கைக்கு போன் செய்து பணம் கேட்டு தொந்தரவு செய்துள்ளார். புகார்தாரரின் தங்கை குடும்பத்தார் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு மனு செய்துள்ளனர். கீழ் நீதிமன்றத்தில் மனு தள்ளுபடி ஆனதால் தற்பொழுது சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் மனு செய்துள்ளோம். சென்னை உயர்நீதிமன்றத்தில் அம்மனு விசாரணைக்கு வரும்போது சாதகமாக பதில் சொல்லவும் வழக்கை முடித்துவைப்பது சம்பந்தமாகவும் தன்னை வந்து பார்த்து பணம் ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று கடந்த 16.10.2022-ஆம் தேதி மீண்டும் புகார்தாரரின் தங்கையின் போனுக்கு தொடர்புகொண்டு அசோக்குமார் கூறியுள்ளார். தனது தங்கைக்கு உடல்நிலை சரியில்லாததால் வரமுடியவில்லை என்று தெரிவிக்க, உங்கள் சார்பாக வேறு யார் வந்தாலும் பரவாயில்லை வந்து பணத்தை கொடுத்துவிட்டு போங்க என்று சொல்லியுள்ளார். அதனால் 28.10.2022-ஆம் தேதி மதியம் 01.45 மணி அளவில் புகார்தாரர்

பரமத்தி காவல் நிலையம் சென்று திரு.அசோக்குமார் அவர்களை சந்தித்தபோது அவர் ஏன் இந்த விசயத்தை இவ்வளவு நாள் இழுக்கீறீர்கள், CSR இல் முடித்திருந்தால் ரூ.5,000/- செலவுடன் போயிருக்கும் என்று சொல்லியுள்ளார். அவரிடம் புகார்தாரர் தங்கை குடும்பத்தினருக்கு வருமானம் ஏதுமில்லை, மேலும் மருத்துவ செலவுகள் நிறைய உள்ளதாகவும், எங்கள் குடும்பத்தார் கேஸ் கொடுத்ததால் அவர்கள் வேண்டுமென்றே பொய் வழக்கு கொடுத்துள்ளதாகச் சொல்லியுள்ளார். அதற்கு அவர் அது தெரியும், ஆனால் இரண்டு கேசில் ஒன்றை முடிக்க முடியாது, ஆகையால் சட்ட பிரிவை மாற்றி சிறிய வழக்காக fine கட்டுவதுபோல் செய்துவிடுகிறேன் என்று சொல்லி நீங்க பணம் என்னைய அதற்காக கவனிச்சிடுங்க, ஏற்கனவே உங்க தங்கச்சிக்கிட்ட ரூ.10,000/- தான் கேட்டேன். ஆனா நீங்க குடும்ப கஷ்டம் என்று சொல்வதால் ரூ.5,000/- கொடுங்க என்று சொல்லியுள்ளார். மத்தபடி மூன்று பேருக்கும் fine, வக்கீல் செலவு எல்லாம் நீங்கதான் பார்த்துக்கனும், எனக்கு கொடுக்கறது தனி என்றும் சொன்னார். நான் தற்சமயம் பணம் இல்லை என்று சொன்னவுடன், பணம் ரெடியானவுடன் போன் பண்ணிட்டு வந்து கொடுங்க, நான் சொன்ன மாதிரி fine கட்டுற மாதிரி கேஸ மாத்திடறேன் என்று செர்லியுள்ளார்

புகார்தாரர் பரமத்தி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்களுக்கு அவரது தங்கை குடம்பத்தார் மீதுள்ள பரமத்தி காவல் நிலைய குற்ற எண்.180/2022 வழக்கு சம்பந்தமாக லஞ்சமாக பணம் ரூ.5,000/- கொடுக்க விருப்பமில்லை என்பதால் அவர்மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டு 29.10.2022-ஆம் தேதி காலை புகார் ஒன்றை நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் கொடுத்தார்.

அப்புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்டு நாமக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.04/AC/2022 u/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறி வைத்து பிடித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொறி வைத்து பிடித்தல் நடவடிக்கையின்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.அசோக்குமார் அவர்கள் புகார்தாரரிடம் நாமக்கல் to கரூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இராசாம்பாளையம் சுங்கச்சாவடியில் அவர் தேவர் ஜெயந்திக்கான வாகன போக்குவரத்தை கண்காணிக்கும் பாதுகாப்பு பணியில் உள்ளதால் அங்கு வரும்படி கூறியதன் பேரில் இன்று மதியம் 02.05 மணியளவில் புகார்தாரர் அங்கு சென்றபோது இரண்டு பயிற்சி பெண் காவலர்களுடன் பணியில் இருந்தவர், புகார்தாரர் வண்டியில் சென்று நிறுத்தியவுடன் புகார்தாரரிடம் வந்து அவரை அழைத்துக்கொண்டு சற்று தூரம் தள்ளி வந்து புகார்தாரரிடம் பணம் ரூ.5,000/- கேட்டு பெற்றுக்கொண்டார். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.அசோக்குமார் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.